[4th March 1968

*Regulated Markets and Super Markets in the State.*

*168 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state the amount of grant given by the Central Government to run the regulated markets and the Super markets for the past five years in Tamilnad?

**அங்காடிகளும், சூப்பர் மார்க்கட்டுகளும்**

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் ஒழுங்குபடுத்திய அங்காடிகளும், சூப்பர்மார்க்கட்டுகளும் நடத்த மத்திய சர்க்கார் சென்ற ஐந்து ஆண்டுகளில் கொடுத்த மான்யம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** ஒழுங்குபடுத்திய அங்காடிகள் (Regulated Markets) ஏற்படுத்துவதற்காக மத்திய அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் மான்யம் ஒன்றும் தரவில்லை.

சிறப்பு அங்காடிகள் (Super Markets) ஏற்படுத்துவதற்காக மத்திய அரசு இதுவரை ரூ. 9,42,750 (ரூபாய் ஒன்பது இலட்சத்து, நாற்பத்து இரண்டாயிரத்து, எழு நூற்றைம்பது) மான்யமாக வழங்கியிருக்கிறது.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவரவர்களே, சூப்பர் மார்க்கெட்டுகள் ஜில்லா தலைநகரங்களில் சில இடங்களில் மட்டும் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு முனிசிபல் நகரத்திலும், மதுரை ஜில்லா திண்டுக்கல், பழனி போன்ற இடங்களில் ஆரம்பிக்க திட்டம் போடப்படுமா? ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்குள்ளும் மக்களுக்குத் தேவையான பொருட்கள் சப்ளை செய்யும் வகையில் விஸ்தரிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன்:** ஏற்கெனவே 5 சூப்பர் மார்க்கெட்டுகள் தொடங்கப்பட்டு நடந்துவருகின்றன. மறுபடியும் வேறு நகரங்களில் எல்லாம் தொடங்கப்பட வேண்டுமென்று கருத்து அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்றிருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும், முக்கியமான நகரங்களில் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அண்மையில் வேலூரில் தொடங்கப்பட்டிருகிறது. மற்ற இடங்களிலும் தொடங்கப்பட இருக்கிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வஹாப்:** தலைவரவர்களே, 5 சிறப்பு அங்காடிகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஐந்து அங்காடிகளிலும் சென்ற ஆண்டு ஏற்பட்ட லாப நஷ்ட கணக்கு விவரம் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

*Embezzlement in Co-operative Department*

*169 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state —

(*a*) the number of cases filed by the Co-operative Department of the Madras State during the period from 1st March 1967 to 31st August 1967 for embezzlement of funds, etc. ;

(*b*) the number of cases stayed ; and

(*c*) the number of cases withdrawn ?

4th March 1968]

### கூட்டுறவு இலாகாவில் ஊழல்கள்.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக கூட்டுறவு இலாகாவினரால் 1-3-1967 முதல் 31-8-1967 வரை கையாடல் போன்ற ஊழல்களுக்காக எத்தனை வழக்குகள் தொடரப்பட்டன ?

(இ) எத்தனை வழக்குகள் நிறுத்தி வைக்கப்பட்டன ?

(உ) எத்தனை வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன ?

**மாண்புமிகு திரு எஸ். மாதவன் :** (அ) இலாகாவினால் போலீசில் கொடுக்கப்பட்ட புகார்கள் 32 (முப்பத்திரண்டு). இவற்றில் 8 புகார்களின் பயனாக கோர்ட்டுகளில் இதுவரை வழக்குகள் தொடரப்பட்டன.

(இ) ஒன்றுமில்லை.

(உ) 1 (ஒன்று).

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவரவர்களே, 1-3-1967-லிருந்து 31-8-1967 வரையிலுள்ள நான்கைந்து மாத கதைதான் இது. பாக்கியுள்ள 7 மாதங்களில் எத்தனை கையாடல் வழக்குகள் தொடரப்பட்டன ? இந்த வழக்குகள் தொடருவதில் பப்ளிக் பிராசிகியூட்டர் தகுந்தவாறு விஷயங்களைக் கூறுவதற்கு அரசாங்கம் ஆலோசனைகளைக் கூறவேண்டும். வழக்குகள் நடத்துவதில் இவர்களுக்குத் திறமை யில்லாத காரணத்தால், பல வழக்குகள் தோல்வியடைந்ததாகத் தெரிகிறது. ஆகவே, தகுந்த வழக்கறிஞர்களைப் போட்டு வழக்கு தொடரப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** தலைவரவர்களே, இந்த இடைக் காலத்தில் 103 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதிலே போலீஸ் கொடுத்தது மட்டும் கேள்வியில் கேட்டதால் 32 என்று சொன்னேன். இதிலே 8 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. போலீஸ் இலாகாவில் இதற்கு என்று தனி ஸ்டாப் இல்லாததால், கால தாமதம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே நாங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், இதை உண்மையென்று ஏற்றுக்கொண்டு, இதற்கென்று தனியாக போலீஸ் "ஸ்டாப்" கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் போதாது, வேறு ஏதாவது வேண்டுமென்று தெரிவித்தால், அது பற்றி பரிசீலிக்கப்படும்.

**திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் :** தலைவரவர்களே, கூட்டுறவு சம்மந்தப் பட்ட வரையில், இது போன்ற ஊழல்கள் தொடர்ந்து நடப்பதாக இருக்கிறது. ஆகவே அவ்வாறு நடக்காமல் இருக்க இந்த அரசாங்கம் ஏதாவது புது முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறதா ? அதுவகையில் வழிவகைகளை ஆராய்ந்து கூட்டுறவு துறையில் செய்ய இவ்வரசு முயல்கிறதா ?

**மாண்புமிகு திரு எஸ். மாதவன் :** இந்த இலாகா சம்மந்தப்பட்ட வரையில், ஊழல் செய்வதைக் கண்டுபிடிக்க முடியாமல் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதிலே விதிமுறையில் தவறு இருக்கிறதா, தனியாக ஆடிட் வேண்டுமா என்பதையெல்லாம் பரிசீலிக்க வேண்டுமா என்பதையெல்லாம் அக்கவுண்டண்ட் ஜெனரல் அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்கள். மொத்தமாக இந்த இயக்கங்களைப் பற்றியும், விதிமுறைகளைப் பற்றியும், அமைப்பு முறைகளைப் பற்றியும் ஆராய இப்போது திரு. கே. சந்தானம் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

[4th March 1968

**திரு. எம். எத்திராஜுலு :** தலைவரவர்களே, இந்த மாதிரியான வழக்குகளை போலீசுக்கு அனுப்பி விசாரணை செய்துகொண்டிருக்கும் போது, இதை மட்டும் கொஞ்சம் நிறுத்தி வைக்கவேண்டுமென்று எதாவது அரசாங்கத்தால் சொல்லப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** எந்த வழக்கு என்று குறிப்பிட்டுக் கேட்கவில்லை. பொதுவாக சட்டத்திலே ஒவ்வொரு கட்டத்திலும் அப்பீல் செய்வதற்கு வழியிருக்கிறது. அந்த அப்பீலில் இடைக்கால தடை உத்தரவு கேட்டால் கொடுக்கவும் சட்டத்தில் இடம் இருக்கிறது. இந்த அரசாங்கத்தினைப் பொறுத்தவரை, கொடுத்ததாக நினைவில்லை.

**திரு. எம். எத்திராஜுலு :** போலீசுக்குத் தெரிவித்த பிறகு, அரசாங்கம் அதை நிறுத்தி வைக்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டதா என்று தான் கேட்டேன். அப்படி எதாவது வழக்கு நிறுத்தி வைக்கவேண்டு மென்று தெரிவித்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** அதைத்தான் எந்த வழக்கை என்று கேட்டேன். போலீசுக்கு டிபார்ட்மெண்டில் உள்ளவர்கள் கம்ப்ளெயின்ட் கொடுக்கிறார்கள். அதை இன்வெஸ்டிகேட் செய்து போலீஸ்காரர்கள் வழக்கு தொடருகிறார்கள். அதற்கிடையிலே அந்த சட்டத்திற்குள்ளே அப்பீல் போடுவதற்கு வாய்ப்பு உண்டு.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவரவர்களே, இந்த மாதிரியான வழக்குகளுள் திருச்சி கூட்டுறவு மத்திய பாங்க் வழக்கும் சேர்ந்திருக்கிறதா? அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** அது பற்றிய விவரமில்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லப்படும்.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மதுரை போடிநாயக்கனூர் கேஸ் வாபஸ் வாங்கப்பட்டது. இது அமைச்சருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** வாபஸ் வாங்கப்பட்டதாகத் தெரியவில்லை. இங்கு சென்னையைப் பற்றித்தான் இருக்கிறது. மதுரை போடிநாயக்கனூர் பற்றி எழுதி அனுப்பினால், நிச்சயமாகச் சொல்ல முடியும். இந்த அரசாங்கம் வாபஸ் வாங்கவில்லை.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** முந்திய அரசாங்கம் வாபஸ் வாங்க மறுத்துவிட்டது. இந்த அரசாங்கம் தான் வாபஸ் வாங்கியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** இந்த அரசாங்கம் வாபஸ் வாங்க வில்லை என்று திரும்பவும் சொல்கிறேன். பாங்கின் பெயரைச் சொன்னால், இப்போதே அதுபற்றிச் சொல்கிறேன்.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** அந்த பாங்கின் பெயர் "போடி நாயக்கனூர் கார்டமம் பாங்கு"

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** இங்கு வழக்கு போடப்படவில்லை. போடப்பட்டு வாபஸ் வாங்கப்படவும் இல்லை. அது விசாரணை நிலையில் இருக்கிறது. போலீஸ் வழக்கு போட்டதாகத் தகவல் இல்லை.

### *Government Hospitals*

*170 *Q.*—THIRU **N. R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is true that in most of the Government hospitals there is no sufficient stock of required medicines ;